செ.வெ.எண்: 387 நாள்: 1.6.2020

**காய்ச்சல், சளி, இருமல் உள்ளிட்ட அறிகுறிகள் இருந்தால் பொது போக்குவரத்தை பயன்படுத்தவதை பயணிகள் முற்றிலும் தவிர்க்க வேண்டும்.**

**புதுக்கோட்டை புதிய பேருந்துநிலையத்தில் பொது போக்குவரத்து துவங்கப்பட்டுள்ளதை ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (1.6.2020) புதுக்கோட்டை புதிய பேருந்துநிலையத்தில் பொது போக்குவரத்து துவங்கப்படுவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது.

பொது பேருந்து போக்குவரத்தை 1.6.2020 முதல் நடைமுறைப்படுத்தும் பொருட்டு மாநிலத்தில் போக்குவரத்து 8 மண்டலமாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 4வது மண்டலத்தில் புதுக்கோட்டை, நாகப்பட்டிணம், திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் உள்ளிட்ட 7 மாவட்டங்கள் அடங்கியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 9 அரசு பேருந்து பணிமனைகள் உள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 383 அரசுப் பேருந்துகள் உள்ளன. இதில் இன்றையதினம் அரசின் உத்தரவின்படி 50% பேருந்துகள் என்ற கணக்கீட்டின்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் 192 பேருந்துகள் இயக்கப்படுகிறது. இதில் உள்ளூர் பேருந்துகள் 70ம், வெளியூர் பேருந்துகள் 122ம் என 60% பயணிகளுடன் இயக்கப்படுகிறது.

பயணிகள் ஏறுவதற்கு முன் கைகளை சுத்தம் செய்து கொள்ள கிருமிநாசினி வழங்கப்படுகிறது. பேருந்தில் ஏறும் போது பின்படிக்கட்டு வழியாக ஏறவும், இறங்கும் போது முன் படிக்கட்டு வழியாக இறங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பயணிகள் முகக்கவசம் அணிந்திருந்தால் மட்டுமே பேருந்தில் பயணிக்க அனுமதிக்கப்படுகிறது. உரிய சமூகஇடைவெளியை பின்பற்றும் வகையில் பயணிகள் அமர வேண்டிய இருக்கைகளில் அடையாளம் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக காய்ச்சல், சளி, இருமல் உள்ளிட்ட அறிகுறிகள் இருந்தால் பொது போக்குவரத்தை பயன்படுத்தவதை பயணிகள் முற்றிலும் தவிர்க்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக புதுக்கோட்டை பொதுமேலாளர் இளங்கோவன், கோட்டாட்சியர் தண்டாயுதபாணி ஆகியோர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**